# என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல், இடறுவார்கள். ஏரே 20 : 11

ஆம் என் அன்பு சகோதரியே சகோதரனே,

உன்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

**ஆதியாகமம் 27 : 40** ஆபிரகாம் தன் மூத்த குமாரன் ஏசாவை பார்த்து சொன்ன வார்த்தையானது, நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியை முறித்துப்போடுவாய்.

ஆம் எனக்கு அருமையானவர்களே,

உங்கள் நுகத்தடியை கர்த்தர் முறித்துப் போடுவார். உங்களுக்கு விரோதமாய் எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.

**இது எப்பொழுது நடக்கும் ?**

எவ்வளவுக்கெவ்வளவு கர்த்தரை பயங்கரமான பராக்கிரம சாலியாய் உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறீர்களோ, அப்பொழுது உங்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்.

**லோத்து வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம்**

**ஊர் ஜனங்கள், லோத்தைப் பார்த்து, ஆதியாகமம் 19:9**

அப்பாலே போ, பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது. இப்பொழுது அவர்களுக்கு(தேவதூதர்) செய்வதைப் பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்பு செய்வோம் என்று சொல்லி, ‘லோத்து என்பவனை, மிகவும் நெருக்கி, கதவை உடைக்க கிட்டினார்க.ள.

**வசனம் 10** அப்பொழுது (லோத்து வீட்டுக்குள் இருந்த தூதர்கள்) தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தை தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு, கதவைப் பூட்டி **வசனம் –11** தெரு வாசலிலிருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப் பண்ணினார்கள். அப்பொழுது அவங்கள் வாசலைத் தேடித் தேடி அலுத்துப் போனார்கள்.

என் அன்பு சகோதரியே, சகோதரனே,

இந்த அற்புதத்தை கர்த்தர் உங்கள் வாழ்விலும் செய்யப் போகிறார்.

**கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுகள்.**

கர்த்தரோ பயங்கரமான பராக்கியமசாலியாய் என்னோடு இருக்கிறார். ஆகையால் என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள் – என்பதாக.

**ஒரு சிறு ரகசியத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.**

இயேசு கிறிஸ்துவை கற்பாறையாக உங்கள் உள்ளத்தில் உறுதியாக வைத்துக் கொள்ளும்போது, உங்கள் மேல் மட்டும் அவர்கள் மோதவில்லை. உங்களுக்குள் இருக்கும் கற்பாறையான இயேசுவினிடத்தில் மோதுகிறார்கள்.

**வேதம் கூறுகிறது.**

இந்தக் கல்லின் மேல் மோதுகிறவன் எவனோ ? அவன் நொறுங்கிப் போவான்–என்பதாக. ஆதலால் திகைக்க வேண்டாம்.

சகோதரனே, சகோதரியே,

நீங்கள் அமைதியாக இருங்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மா இருப்பீர்கள் என்ற வசனத்தின்படி உங்களில் எந்தவித குழப்பமும் வராதபடி நீங்கள் பொறுமையாக இருங்கள்.

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்.

அப்பொழுது கர்த்தரோ பயங்கரமான பலசாலியாய் உன்னோடு இருப்பார். ஆகையால்

**உன்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல், இடறுவார்கள். தேவனுக்கே மகிமை.**

**கர்த்தருடைய வார்த்தை சொல்கின்றது,**

எவர்கள் உனக்கு விரோதமாய் எழும்புகிறார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள். உனக்கு விரோதமாய் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். அதுமாத்திரமல்ல,

**உன்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல், இடறுவார்கள்.**